ජාතික ව්‍යවසාය සංවර්ධන අධිකාරිය
தேசிய நிறுவன மேம்பாட்டு ஆணையம்
National Enterprise Development Authority

වාර්ෂික වාර්තාව
ஆண்டு அறிக்கை
ANNUAL REPORT
2022

කර්මාන්ත හා ව්‍යවසායකත්ව සංවර්ධන අමාත්‍යාංශය
தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சகம்
Ministry of Indndustry and Entrepreneurship Development

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்தல், மேம்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் தரமுயர்த்தல் முதலான பணிகளை நிறைவேற்றுவதற்கான முதன்மை முகவராக இருத்தல்.

பணிக்கூற்று

இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் முன்னேற்றம் மற்றும் நிலைபேரான தன்மையினை உறுதிசெய்வதற்காக ஏனைய திறத்தவர்களுடன் ஒருங்கிணைந்தும் கூட்டிணைந்தும் வினைத்திறனும் பயனுறுதியும் மிக்க தொழில் முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்தல், மேம்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் தரமுயர்த்துதல்.

நோக்கங்கள்

01. இலங்கையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தியினை ஊக்குவித்தல், மேம்படுத்தல் மற்றும் வசதிகளினை வழங்குவதனூடாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தியினை துரிதப்படுத்துவதற்கான ஊக்குவித்தல்.

02. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை (நேனுயு) சட்டத்தின் குறிக்கோள்களை அடையும் முகமாக வெளிநாட்டுச் சந்தைகளின் தேவைகளினை பூர்த்தி செய்யக்கூடிய உள்நாட்டுச் சந்தைகளினை இலங்கைக்கு வெளியே சர்வதேச ரீதியில் ஸ்தாபித்து தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கான திட்டமிடல்களுக்கு முயற்சித்தல் மற்றும் அதற்காக ஊக்குவித்தல்.

03. கைத்தொழில் மற்றும் விவசாயத்துறை ரீதியிலான வியாபாரங்களையும், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் வினைத்திறனாக மேம்படுத்துவதற்கும் ஆதரவளிப்பதற்குமான கொள்கைகள், திட்டமிடல்கள் மற்றும் திட்டமிடப்பட்ட மேம்படுத்தல் ஊக்குவிப்புக்களை வழங்குதல்.

04. தொழில்முயற்சி அபிவிருத்தியினது முதன்மையான தேவைப்பாடொன்றாக தொழில்நுட்ப திறனுடன் கூடிய மனித மூலதனமான மக்களை வலுப்படுத்தல்.

05. அபிவிருத்தி தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

06. தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் செயற்படுத்துவதற்குத் தேவையான நிதி பங்களிப்பு அணுகலுக்காக தொழில்முயற்சியாளர்களுக்கு வசதிகளை வழங்குதல்.

07. உற்பத்தி அபிவிருத்தி, தொழில்நுட்பத்தினை மேம்படுத்தல் மற்றும் பேற்றன் உரிமம் வர்த்தகமயமாக்கலுடன் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதற்கான தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியினை உருவாக்குதல்.

08. பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கான வசதிகளை வழங்குதல்.

தலைவரின் செய்தி

தேசிய தொழில் முயற்சி அதிகார சபை (NEDA) இலங்கைச் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரை மேம்படுத்தவும் நிலைப்படுத்தவும் முக்கிய ஆதரவு வழங்கும் நிறுவனமாகும். ஆலோசனை, பயிற்சி, சந்தை இணைப்பு, தொழில் கண்காட்சி, தொழில் மன்றங்கள் போன்ற சேவைகள் வழியாக எந்தவித தொழில் சூழலும் அடுத்த நிலைக்கு முன்னேறுவதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

தற்போதைய தொழில் முனைவோரின் தரத்தை மேம்படுத்தி அவர்களின் சிக்கல்களுக்கு தீர்வுகள் வழங்குவதும், புதிய தொழில் முனைவோரை உருவாக்கி, அவர்கள் எந்த சவாலையும் சமாளிக்கும் நம்பிக்கையை பெறச் செய்வதும் நாங்கள் தீவிரமாக கவனம் செலுத்தும் இரண்டு முக்கிய குறிக்கோள்கள் ஆகும். மேலும், எனது பதவிக்காலத்தில் அடையத் திட்டமிட்டுள்ள மற்றொரு முக்கிய இலக்கு, வேலை தேடும் நபர்களின் எண்ணிக்கையை குறைத்து வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நபர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதாகும்.

இந்தக் குறிக்கோள்களை மனதில் கொண்டு, தேசிய தொழில் வளர்ச்சி சட்ட எண் 17, 2006 இன் பிரிவு 13-இன் இலக்குகளோடு இணைக்கப்பட்டுள்ள NEDA வின் குறிக்கோள்களை அடைய தினமும் இடையறாது உழைப்போம். என் பதவிக்காலத்தில் இத்தகைய அனைத்து இலக்குகளையும் அடைந்து, இலங்கை பொருளாதாரத்தை வலுப்படுத்துவோம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

திரு. லசந்த கரியப்பெரும
தலைவர் / பொதுநிர்வாக இயக்குநர்
தேசிய தொழில் முயற்சி அதிகார சபை

பணிப்பாளர் சபை

திரு. சுனில் ஜயரத்ன - தலைவர்

திரு. சமிந்த பதிராஜ - மேலதிகச் செயலாளர், கைத்தொழில் அமைச்சு – பணிப்பாளர் சபை உறுப்பினர்

திருமதி. எஸ். என். மீதலாவ - பணிப்பாளர் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் (நிதி அமைச்சு) - பணிப்பாளர் சபை உறுப்பினர்

திரு. இந்திக நி'ாந்த குணரத்ன - பணிப்பாளர் சபை உறுப்பினர்

திரு. கடுபிடிகே பிரசாத் ஜயரங்க சில்வா - பணிப்பாளர் சபை உறுப்பினர்

திரு. அமரசிங்கயகே ஹேமசிரி பெரேரா- பணிப்பாளர் சபை உறுப்பினர்

திரு. ஏ. எல். புத்திக சந்தருவன் - பணிப்பாளர் சபை உறுப்பினர்

திரு. ஜே. எம். ஆனந்த பிரேமதிலக - பணிப்பாளர் சபை உறுப்பினர்

திரு. அசங்க விஜேசுந்தர - பணிப்பாளர் சபை உறுப்பினர்

2024 **டிசம்பர்** 19

மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹதுன்னெத்தி,
தொழில் மற்றும் வணிக மேம்பாட்டு அமைச்சர்,
தொழில் மற்றும் வணிக மேம்பாட்டு அமைச்சு.

இல.73/1,
காலி வீதி,
கொழும்பு 03.

கௌரவ ஐயா,

வருடாந்த அறிக்கை 2022

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்கக நிதிச்சட்டத்தின் 14(2)ஆம் பிரிவின்படி, நான் பின்வரும் ஆவணங்களைச் சமா்ப்பிக்கின்றேன்.

1. தேசிய தொழில்முயற்சி அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கை.
2. 31 டிசம்பா் 2022 அன்றுள்ளளபடியான ஐந்தொகை, 31 டிசம்பா் 2022 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செயலவுக் கணக்கு, 31 டிசம்பா் 2022 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்வுக் கூற்று.
3. கணக்காய்வாளா் தலைமை அதிபதியின் அறிக்கை.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

லக்ஷ்மன் அபேசேகர
சபைத் தலைவர் / பொது பணிப்பாளர்

தேசிய தொழில் மேம்பாட்டு அதிகாரசபை (NEDA) செயல்திறன் (2012 – 2022) மற்றும் எதிர்காலத் திட்டம்

தேசிய தொழில் மேம்பாட்டு அதிகாரசபை (NEDA) 2006 ஆம் ஆண்டு தொழில் மேம்பாடு மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் கீழ் செயல்படத் தொடங்கியது. 2006 ஜூலை மாதத்தில் துவக்கத்தை மேற்பார்வை செய்வதற்கான பணிக்குழு நியமிக்கப்பட்டது. அதே ஆண்டின் செப்டெம்பர் மாதத்தில் இயக்குனர் சபையும் நியமிக்கப்பட்டது. 2006 ஜூலை முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் வெறும் ஏழு பேர் மட்டுமே பணியில் ஈடுபட்டிருந்தனர். ஆரம்பகால நிதியுதவி அமைச்சகத்திலிருந்தும் பொது பொருளாதாரப் பிரிவிலிருந்தும் கிடைத்தது.

2007 ஆம் ஆண்டு முறையான அமைப்பு கட்டமைப்பை உருவாக்கவும் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் ஒன்பது பதவிகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டன, மேலும் தலைவர்/பொது இயக்குனர் போன்ற முக்கிய பதவிகள் நிரப்பப்படாமல் இருந்தன. அமைச்சகம் கூடுதல் பணியாளர்களை வழங்கியிருந்தாலும் அதிகாரசபை இடைக்கால ஊழியர்களையும் சார்ந்திருந்தது. நிதி பற்றாக்குறை மற்றும் மைய பணியாளர்கள் இல்லாமை ஆரம்பகால சவால்களாக இருந்தன.

2010 ஆம் ஆண்டு NEDA-வின் மேற்பார்வை தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு மாற்றப்பட்டது. இதனால் NEDA சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுடன் ஒத்திசைவான குறிப்பிட்ட செயல்பாடுகளை நிறுவுவதில் புதிய கவனம் செலுத்தப்பட்டது. இவை SME மேம்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் எளிதாக்கல், SME-கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தல், தொகுதி மேம்பாட்டு ஆய்வுகள் நடத்தல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி ஒன்றை நிறுவுவதற்கான ஆரம்பத் திட்டங்களைத் தொடங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியவை. SME சிக்கல்களை கண்டறிதல் மற்றும் கொள்கை பரிந்துரைகள் உருவாக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன.

NEDA இலங்கையில் தொழில் மேம்பாட்டை ஆதரிப்பதில், ஊக்குவிப்பதில் மற்றும் எளிதாக்குவதில் முக்கிய பங்காற்றுகிறது. குறிப்பாக மிகச்சிறிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME) துறைக்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. NEDA தொழில்முனைவோர் மேம்பாடு, நிதி வசதிகள், சந்தை இணைப்புகள், ஆராய்ச்சி மற்றும்

மேம்பாடு மற்றும் தொழில் மேம்பாட்டு சேவை வழங்குநர்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்குகிறது.

கடந்த பத்து ஆண்டுகளாக, NEDA தொழில்முனைவோர், சந்தைப்படுத்தல், தொழில் திட்டமிடல், கணக்கியல், பதிவேடு பராமரிப்பு மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடு போன்ற துறைகளில் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கி வருகிறது. 2021 ஆம் ஆண்டு "Made in Sri Lanka" எனப்படும் வர்த்தக தளம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது உள்ளூர் தயாரிப்புகளுக்கான சந்தை வாய்ப்புகளை உருவாக்கி MSME-களின் சர்வதேச போட்டித் திறனை மேம்படுத்துகிறது.

2012 ஆம் ஆண்டு NEDA MSME தரவுத்தளத்தை அறிமுகப்படுத்தியது. மாவட்ட மற்றும் பிராந்திய தொழில் மன்றங்கள் தொழில்முனைவோருக்கு வணிக மேம்பாட்டு சேவைகளை வழங்கும் தளமாக செயல்படுகின்றன. இம்மன்றங்கள் அரச மற்றும் அரசல்லாத தொழில் மேம்பாட்டு சேவை வழங்குநர்கள், வர்த்தக சபைகள் மற்றும் தொழிற்சங்கங்களை ஒருங்கிணைக்கின்றன.

2021 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட "Made in Sri Lanka" பிராந்திய கண்காட்சிகள் உள்ளூர் தொழில்முனைவோருக்கு தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்தவும் பிராந்திய மட்டத்தில் சந்தை இணைப்புகளை உருவாக்கவும் வாய்ப்பளிக்கின்றன.

2012 – 2022 காலப்பகுதியில் NEDA வணிகக் குழுக்களை வெற்றிகரமாக உருவாக்கியது. இதன் மூலம் பயிற்சி, புதுமை, நிதி அணுகல் மற்றும் நிறுவல் ஆதரவு மேம்படுத்தப்பட்டது.

தேசிய மற்றும் மாகாண தொழில்முனைவோர் விருது விழாக்கள் NEDA-வால் மாவட்ட வர்த்தக சபைகள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்படுகின்றன. இவை இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பு செய்த தொழில்முனைவோரை கௌரவிப்பதற்கும் விருதளிப்பதற்கும் நோக்கமாகக் கொண்டவை.

“உபாதிதாரி வியவசாயக உதானய” எனப்படும் திட்டம் பல்கலைக்கழக பட்டதாரிகளை தொழில்முனைவோர்களாக உருவாக்குகிறது. 2017 – 2022 காலப்பகுதியில் 800 க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் NEDA மூலம் தொழில்முனைவோர் பயிற்சி பெற்று வணிகம் தொடங்க உதவிபெற்றனர்.

2012 – 2022 காலப்பகுதியில் NEDA தொழில்முனைவோர், தொழில்நுட்ப, நிதி மேலாண்மை போன்ற துறைகளில் சுமார் 65,000 தொழில்முனைவோருக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளது.

எதிர்காலத் திட்டங்கள்

1. இலங்கையில் MSME தயாரிப்புகளை காட்சிப்படுத்துவதற்கான மையத்தை நிறுவுதல்.

2. பலாப்பழ அடிப்படையிலான மதிப்பூட்டப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிப்பதற்காக “Jack Mart” ஒன்றை நிறுவுதல்.

3. பட்டதாரி தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல்.

4. கெலனியா பல்கலைக்கழகத்தில் தொழில் மேம்பாட்டு மையம் ஒன்றை நிறுவுதல்.

5. “MSME மேம்பாட்டு மற்றும் எளிதாக்கல் குழுவை” நிறுவுதல்.

6. தொழில் அமைச்சின் செயலாளரின் கீழ் முக்கிய அரச நிறுவனங்களின் பங்குபற்றலுடன் ஏற்றுமதி மேம்பாட்டு பணிக்குழுவை/மன்றத்தை நிறுவுதல்.

ஆண்டறிக்கை 2022

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

நிகழ்ச்சித்திட்டம் 01: ‘‘மேட் இன் ஸ்ரீ லங்கா’’ வியாபார இணைய முகப்பு

நிகழ்ச்சித்திட்டம் 02: நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான (ஆளுஆநு) தரவுத்தளம்

நிகழ்ச்சித்திட்டம் 03: ‘‘மேட் இன் ஸ்ரீ லங்கா’’ இலட்சிணைக்கான மேம்படுத்தலும் விருது வழங்குதலும்

நிகழ்ச்சித்திட்டம் 04: ‘‘மேட் இன் ஸ்ரீ லங்கா’’ வர்த்தக கண்காட்சிகள்

நிகழ்ச்சித்திட்டம் 05: ‘‘மேட் இன் ஸ்ரீ லங்கா’’ அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்கள்

நிகழ்ச்சித்திட்டம் 06: ‘‘உபாதிதாரி வியவசாயகத்வ உதானய’’ நிகழ்ச்சித்திட்டம்

நிகழ்ச்சித்திட்டம் 07: வியாபார கொத்தணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நிகழ்ச்சித்திட்டம் 08: பிராந்திய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நிகழ்ச்சித்திட்டம் 09: தொழில் முயற்சி மாநாடு

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2022

01. "மேட் இன் ஸ்ரீ லங்கா" வியாபார இணைய முகப்பு

தமது வியாபாரத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்குத் தேவையான சந்தைத் தொடர்புகள் இன்மையானது இலங்கையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரத்துறையில் ஈடுப்பட்டுள்ளவர்களின் முன்னேற்றத்தை தடுமாற்றமடையச்செய்யும் அடிப்படை காரணமாக உள்ளது. இந்த கருத்திட்டத்தினை செயற்படுத்துவதனூடாக அவ்வாறான பிரச்சனைகளை பெருமளவில் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதுடன், இந்த வியாபார இணைய முகப்பினூடாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்திகள் தொடர்பான கலப்புச் சந்தை தகவல்களையும் வழங்க முடியும். மேலும், இங்கு குறைந்த செலவில் நுகர்வோர்களையும் வழங்குனர்களையும் ஈர்த்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு உள்ளது. இருப்பினும், கீழ்மட்டத்திலுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தினை பயன்படுத்துவதற்கான நிதி வசதிகள் இன்மையானது அவர்களது வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கு பிரதான தடையாக காணப்படுகின்றது. அதற்கமைய, அவர்களுக்கு கணினி வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்களை கொள்வனவு செய்வதற்கும், தகவல் தொழில்நுட்ப வல்லுனர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கும், புதிய தொழில்நுட்பங்களுடன் பணி புரிவதற்காக தமது வியாபார இணைய முகப்பினை அபிவிருத்தி செய்வதற்கும் முடிவதில்லை. மேலும், அவர்களுக்கு தமது வியாபார நடவடிக்கைகளை இலகுவாக்கிக்கொள்வதற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பது தொடர்பான போதியளவான அறிவு இல்லை.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த கருத்திட்டத்தினை உருவாக்கியதன் மூலமாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு தமது உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு தேவையான டிஜிட்டல் தளங்களை உருவாக்குவதற்கு நடைமுறையிலுள்ள நிதி ரீதியிலான சிக்கல்களை தீர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் வியாபார இணைய முகப்பினூடாக நுண், சிறிய நடுத்தர அளவிலான உற்பத்திகளுக்கான மிகவும் குறைந்த செலவில் உள்நாட்டுச் சந்தைகள் மட்டுமன்றி சர்வதேச சந்தைகளையும் வெற்றிகரமாக சமாளிக்கும் வகையில் சந்தை வாய்ப்புகளை அணுகுவதற்கான பரந்த பின்னணியொன்று தயாரிக்கப்படும். கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தப்படுவதுடன், புதிய தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதற்கு தேவையான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு, கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவனமான தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினூடாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதனால், இக்கருத்திட்டமானது ஆரம்பிக்கப்பட்டு அது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதுடன் நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்

முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பல முக்கிய பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கு முடிந்துள்ளது.

இலங்கை உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு வினைத்திறன் மற்றும் பயனுறுதி வாய்ந்த வியாபார கொத்தணிகளை நிறுவுதல் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்திகளை வியாபார கொத்தணிகளில் பதிவு செய்வதனூடாக சந்தைக்கான வாய்ப்புகளை அதிகரித்துக்கொள்ளுதல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படுவதுடன், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் வழிகாட்டலின் கீழ் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு, அவர்களின் நுகர்வோர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் வணிகத்திலிருந்து வணிகத்திற்கு (டீ2டீ) மற்றும் வணிகத்திலிருந்து நுகர்வோர்களுக்கு (டீ2ஊ) ஆகிய கருப்பொருளின் கீழ் அனைத்து விதமான வியாபார நடவடிக்கைகளையும் உயர் வினைத்திறனுடன் அடைந்துக்கொள்வதற்காக டிஜிட்டல் தளத்தினை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினூடாக இந்த வியாபார கொத்தணிகள் நிறுவப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டில் 917 விற்பனையாளர்கள் வியாபார கொத்தணிகளில் பதிவு செய்துள்ளனர். மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதிகாரசபைக்கு பிற வருமானங்களை ஈட்டுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வியாபார கொத்தணிகள் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறுவப்பட்டன.

02. நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தொடர்பான தரவுத்தளம்

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளானவை உலகில் எல்லா பொருளாதாரங்களிலும் அதிகரித்துவரும் போக்குடனும் முக்கிய பங்கினை வகிக்கும் துறையாகவும் மாறியுள்ளதுடன், இதன் விளைவாக இந்த கைத்தொழில் துறையானது பல நாடுகளில் பொருளாதாரங்களின் முதுகெலும்பாக கருதப்படுகின்றது. இலங்கையில், இந்த தொழில் முயற்சி துறையானது மொத்த கைத்தொழிலில் 75 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், 45 சதவீதமான தொழில் வாய்ப்புகளை உருவாக்குகின்றது. அதேப்போன்று, மொத்த தேசிய உற்பத்தியில் 52 சதவீத பங்களிப்பினைச் செய்கிறது. எவ்வாறாயினும், அபிவிருத்தியடைந்த மற்றும் வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்த சதவீதங்கள் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமையினால், எமது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சித்துறைகளை விரைவான வளர்ச்சிக்கு உட்படுத்த வேண்டியதுடன் அதனை வளர்ச்சி சார்ந்த துறையாக மாற்றமடையச் செய்தல் வேண்டும்.

இலங்கையில் கைத்தொழில் தொடர்பாக அனைத்து தேவையான தரவுகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட தனித்தரவுக் களஞ்சியத்தினை எந்தவொரு நிறுவனமும் பேணிவருவதில்லை. கைத்தொழிற்துறையில் மூலோபாயத் தீர்மானங்களை தயாரிக்கும் போது நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள்

தொடர்பான விரிவான தரவுக் களஞ்சியமொன்று இன்மையானது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய குறைப்பாடொன்றாகும். அதற்கமைய, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினூடாக பேணப்பட்டு வரும் இந்த தரவுக் களஞ்சியத்தினை மேம்படுத்துவற்கு பொறுப்பளிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தரினால் தொழில் முயற்சியாளர்கள் தொடர்பான தரவுகளை மென் பிரதியாக பெறப்படுவதுடன், அத் தகவல்கள் அவ்வப்போதே மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், இதன் மூலம் தொழிற்பிரிவில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை தூண்டுவதும் எமது மற்றுமொரு நோக்கமாகும். அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் தொடர்பான தரவுத் தளமானது நிறுவப்பட்டதுடன், 260,000 தொழில் முயற்சியாளர்களின் தரவுகள் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன.

03. “மேட் இன் ஸ்ரீ லங்கா” இலட்சிணைக்கான மேம்படுத்தலும் விருது வழங்குதலும்

உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி பிராந்திய மட்டங்களில் நடாத்தப்பட்டு வரும் வியாபாரங்கள் எவ்வளவு இருப்பினும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுடன் ஒப்பிடும் போது உள்நாட்டு உற்பத்திகளுக்கு சரியான அங்கீகாரம் காணப்படுவதில்லை. எனவே, நுகர்வோர்கள் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கே முன்னுரிமை அளித்துள்ளதுடன், இதன் விளைவாக உள்நாட்டு உற்பத்திகளுக்கான கேள்வி குறைந்துள்ளது. மேலும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் உள்நாட்டு உற்பத்திகளை விட தரம் வாய்ந்தவை என்ற அபிப்பிராயமானது நுகர்வோர் மத்தியில் உருவாகவும் வழிவகுத்தது. இந்த காரணிகளை கருத்திற்கொண்டு உள்நாட்டு உற்பத்திகளுக்கு அதிக கேள்வியினை உருவாக்கும் வகையில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினூடாக உள்;ர் உற்பத்திகளை பிரதிபளிக்கும் வகையிலான இலட்சிணைகளை அறிமுகப்படுத்தி, உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மட்டம்	உற்பத்தி		சேவை	
	ஆண்டுக்கான வருமானம் (ரூ. மில்.)	ஊழியர்களின் எண்ணிக்கை	ஆண்டுக்கான வருமானம் (ரூ. மில்.)	ஊழியர்களின் எண்ணிக்கை
நுண்	ஈ 15	ஈ10	ஈ 15	ஈ10
சிறிய	16-250	11-50	16-250	11-50
நடுத்தரம்	251- 750	51-300	251- 750	51-200
பாரியளவு	,750	,300	,750	,200

பிரித்தெடுப்பு: கைத்தொழில் அமைச்சின் கொள்கைகள் அறிக்கை

விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் மூலமாக இலட்சிணையினை வழங்குவதற்கு தகுதியான தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2021 ஆம் வருடத்தில் 57 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 37 மேட் இன் ஸ்ரீ லங்கா இலட்சிணைகள் வழங்கப்பட்டுள்ளன.

04. "மேட் இன் ஸ்ரீ லங்கா" வர்த்தக கண்காட்சிகள்

உயரிய பெறுமதிகளை சேர்த்துக்கொள்வதன் மூலமாக நேர்மையான இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்திகளை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலை நோக்காகக் கொண்டு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினூடாக **"மேட் இன் ஸ்ரீ லங்கா"** இலட்சிணை வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு சமாந்தரமாக, இந்த இலங்கை உற்பத்திகளை சர்வதேச சந்தைக்கு அறிமுகப்படுத்தும் வகையில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் வர்த்தக கண்காட்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன. அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரகபையினால் காலி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் இரண்டு மேட் இன் ஸ்ரீ லங்கா வர்த்தக கண்காட்சிகள் (160 விற்பனை நிலையங்கள் மற்றும் 199 தொழில் முயற்சியாளர்கள்) நடாத்தப்பட்டு வியாபாரங்களுக்கிடையிலான போட்டித்தன்மையை உருவாக்குவதற்கும், சர்வதேச சந்தைக்கு பொருந்தும் வகையில் உண்மையான இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்திகளுக்கான சந்தை அணுகலை விரிவுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிற அனுகூலங்கள்:

- மேட் இன் ஸ்ரீ லங்கா என்ற தொனிப்பொருளின் கீழ் இலங்கையின் பெறுமதி சேர்க்கப்பட்ட நேர்மையான உற்பத்தி அடிப்படையொன்றினை உருவாக்கி அவர்களுக்கு இலட்சிணைகளை வழங்குதல்.
- சர்வதேச சந்தைகளுக்கு இணையாக உள்நாட்டு உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
- நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு நாடு முழுவதிலும் தமது உற்பத்திகளுக்கான தொடர்ச்சியான சந்தை அணுகலை உறுதி செய்தல்.
- இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இலங்கை தயாரிப்புக்களை பிரபலப்படுத்துதல்.

  மேலும், பிராந்திய பணிக்குழாமினரால் பிராந்தியங்களில் சிறு மட்டத்திலான 121 வர்த்தக கண்காட்சிகள் நடாத்தப்பட்டதுடன், நுண் மட்டத்திலான தொழில் முனைவோருக்காக (3101 தொழில் முனைவோர்) கண்காட்சி வியாபார நிலைய வசதிகளை வழங்கியுள்ளனர்.

வர்த்தகக் கண்காட்சி – காலி

வர்த்தகக் கண்காட்சி – கண்டி

05. “மேட் இன் ஸ்ரீ லங்கா” அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்கள்

உயர் பெறுமதிகளை சேர்த்துக்கொள்வதன் மூலம் நேர்மையான இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்திகளை மேம்படுத்தும் மற்றும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் “மேட் இன் ஸ்ரீ லங்கா” இலட்சிணையானது வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு சமாந்தரமாக இலங்கையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்திகளுக்கான சந்தைகளை கட்டியெழுப்பும் நோக்கத்துடன் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களின் வலையமைப்பொன்று நிறுவப்பட்டுள்ளது.

இந்த பொறிமுறையினூடாக நாடு முழுவதிலுமுள்ள சந்தைப்படுத்தல் தொடர்புகளை மேம்படுத்துவதற்கு நுண், சிறிய மற்றும் நடுவும்த்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு உதவும். மறுபுறம், **‘மேட் இன் ஸ்ரீ லங்கா’** இலட்சிணையினைப் பெற்ற விற்பனையாளர்களுக்கு தங்களது உற்பத்திகளை அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களினூடாக காட்சிப்படுத்துவதற்கும், வருமானத்தினை ஈட்டுவதற்கும் உதவும்.

ஒரே நிழலின் கீழ் எமது பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்காக மேட் இன் ஸ்ரீ லங்கா அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களை நாடு முழுவதும் நிறுவுவதற்கு மிகவும் கவர்ச்சிகரமான இடங்களை தெரிவு செய்வதற்காக தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தங்களுடைய வியாபார

நிலையங்களை நிறுவுவதற்கு ஆர்வமுள்ள உள்நாட்டு தொழில் முயற்சியாளர்கள் ∴ பங்குதாரர்களின் அழைப்புகளை பரிசீலித்து அதிகாரசபையினால் விற்பனை நிலையங்கள் நிறுவுவதற்கு பொருத்தமான இடங்கள் தெரிவு செய்யப்படும். ஒவ்வொரு விற்பனை நிலையங்களின் திட்டமும் பண்டக்குறியிடல், நிற சேர்க்கைகள், மாதிரிகள், ஒளி அமைப்புகள், காட்சிப்படுத்தல்கள் மற்றும் உயர்ந்தபட்ச விற்பனைகளை முன்வைத்தல் ஆகியன ஒருங்கிணைக்கப்பட்ட ஒட்டுமொத்த பொருட் கொள்வனவு அனுபவத்திற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில், மாத்தளை மாவட்ட உத்தியோகத்தர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் நாவுல பிரதேச செயலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையமொன்றினை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைக்கு நிறுவ முடிந்தது. மாத்தளை பிரதான வீதியின் ஊடாக பயணிக்கும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளை கவருவதற்கு இது சிறந்த இடமாகும். அது மட்டுமன்றி, இந்த எண்ணக்கருவின் மூலமாக அதிகாரசபைக்கு குறிப்பிடத்தக்க சதவீதத்தில் வருமானமொன்றினை ஈட்டக்கூடிய வாய்ப்பு உள்ளது.

06. "உபாதிதாரி வியவசாயக உதானய" நிகழ்ச்சித்திட்டம் ("வியாபாரத்திற்கான நுண்ணறிவு")

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் பல்கலைக்கழக பட்டதாரிகளின் திறன்களை மேம்படுத்தவும் அவர்களுக்கு வர்த்தக உலகின் கதவுகளை திறப்பதன் மூலமாக வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களாக முன்னேறிச் செல்வதற்கான ஊக்குவிப்பினை வழங்குவதற்காகவும் விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகையதொரு முன் ஆரம்பத்திற்கான பொருத்தமான சூழலை உருவாக்குவதற்கு தொழில் முயற்சியாண்மை கல்வி மற்றும் மென் திறன்களை வளர்ப்பதற்கான சரியான முறையிலான வழிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். பல்கலைக்கழகங்களில் தற்போது தொழில் வழிகாட்டல் அலகுகள் பட்டதாரி தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு முக்கியமானதொரு வகிப்பாகத்தினை மேற்கொள்வதுடன், அத்தகைய பட்டதாரி தொழில் முனைவோரை உருவாக்குவதன் மூலம் பெரும்பாலானோருக்கு வேலை வாய்ப்புகளை

உருவாக்குவதற்கு அவ் அலகானது உதவி புரியும் என்பது தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கருத்தாகும்.

தற்போதைய சமூக அழுத்தம் மற்றும் தொழில் முயற்சியாளராக இருப்பதனால் கிடைக்கும் பலன்கள் தொடர்பான அறியாமை காரணமாக பட்டதாரிகள் வேறு தொழில்களில் ஈடுப்படும் போக்கினை காணக்கூடியதாக உள்ளது. மேலும், தொழில் முயற்சியாண்மை பற்றிய புரிதல் இல்லாமை, வியாபார நடவடிக்கைகள் தொடர்பான போதியளவான அறிவின்மை, ஆரம்ப மூலதனம் இல்லாமை மற்றும் வியாபார நடவடிக்கைகளில் காணப்படும் அபாயகரமான சூழ்நிலைகள் போன்ற காரணங்களினால் பட்டதாரிகளுக்கு வியாபார நிச்சயத்தன்மைகளில் ஆர்வம் வீழ்ச்சியடைந்துள்ளமையினால், மேற் குறிப்பிட்ட விடயங்களை கருத்திற் கொண்டு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் பட்டதாரி தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டமானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது பட்டதாரிகளை வியாபார துறையில் ஈடுப்படுத்துவதற்காக பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தியதுடன், அது **"உபாதிதாரி வியவசாயக உதானய" (பட்டதாரி தொழில் முயற்சியாளர்களின் எழுச்சி)** என்ற பெயரில் பட்டதாரிகளிடையே வியாபார பிரசாரம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வியாபாரத் துறையில் நுழைவதற்கு பட்டதாரிகளை ஊக்குவிப்பதும் அவர்களை வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களாக மேம்படுத்துவதுமே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2021 ஆம் ஆண்டு வரையில் 200 வரையிலான பட்டதாரி தொழில் முயற்சியாளர்களை வியாபார உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 115 பட்டதாரி தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டதுடன், அதில் 07 தொழில் முயற்சியாளர்களுக்கு

நிதி வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

பிரதான செயற்பாடுகள்:

பட்டதாரிகளின் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்: ஆரம்ப கட்டமாக, பல்கலைக்கழகங்களில் தொழில் வழிகாட்டல் அலகின் உதவியுடன் பட்டதாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று ஏற்பாடு செய்யப்படும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பட்டதாரிகளுக்கு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விழிப்புணர்வினையும் வியாபார துறையில் உள்நுழைவதற்கான ஊக்குவிப்பினையும் வழங்குகின்றது.

நிகழ்ச்சித்திட்டத்திற்காக பட்டதாரிகளை தெரிவு செய்தல்: பல்கலைக்கழகங்களின் தொழில் வழிகாட்டல் அலகின் உதவியுடன் விண்ணப்பங்கள் மற்றும் தனிப்பட்ட நேர்காணலின் மூலமாக தெரிவு செய்யப்படுவர்.

திறன் அபிவிருத்தி: இது பல்வேறு படிமுறைகள் கொண்டுள்ளது.

படிமுறை 1: பட்டதாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் (1 நாள்)

படிமுறை 2: வியாபார திட்டமிடல்கள் தொடர்பான பயிற்சி (2 நாட்கள்)

நிதி உதவி: அனைத்து பல்கலைக்கழகங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் நிதி மானியம் வழங்கப்படும். அதிகாரசபையின் தவிசாளரினால் நியமிக்கப்பட்ட மதிப்பீட்டுச் சபையினூடாக தெரிவு இடம்பெறும். மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாட்டிற்கு மேலதிகமாக, கடன் வழங்குதல் போன்ற சில நிதி உதவிகள் உள்நாட்டு வங்கிகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன.

பின்னூட்டல் மற்றும் வியாபார ஆலோசனை: வியாபாரத்தின் நிலைத்து நிற்கும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு பின்னூட்டல் சேவையானது வழங்கப்படுகின்றது. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது ஒரு வருட பின்னூட்டல் சேவைக்காக இணைகிறது.

07. கொத்தணி வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் (ஆளுஆநுள) இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இலங்கையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளில் பெரும்பாலானவை தனிமைப்படுத்தப்பட்டிருப்பதுடன் எந்தவிதமான வழிகாட்டுதல்களுமின்றி அவர்களது உற்பத்தி செயற்பாடுகளை தொடர்வதனையும் அவதானிக்க முடிகின்றது. அவ்வாறான தொழில் முயற்சியாளர்களுக்கு தனித்தனியாக தொடர்ந்து வரும் சவால்களுக்கு முகங்கொடுக்க முடிவதில்லை. தற்போதைய நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் வரையறுக்கப்பட்ட நிதியை வினைத்திறனான முறையில் முகாமைத்துவம் செய்வதானது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த சவால்களுக்கு தீர்வாகும் வகையில் கொத்தணி அடிப்படையிலான மேம்படுத்தல்கள் மற்றும் அபிவிருத்தி அணுகுமுறைகள் முன்மொழியப்பட்டுள்ளன. கொத்தணி.ஃ. துறை அடிப்படையிலான அணுகுமுறைகள் பல நன்மைகள் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. (உதாரணம்: செலவுகளைக் குறைத்தல், வளங்களின் வினைத்திறன், இலகுவான முகாமைத்துவம்…போன்றவை). கொத்தணி அடிப்படையிலான அணுகுமுறை பல்வேறு நன்மைகளைக் கொண்டுள்ளது. நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கொத்தணி வியாபாரங்களுக்கு பயிற்சி மற்றும் தொழில்நுட்ப கண்டுப்பிடிப்புக்கள், நிதிக்கான எளிய அணுகல் மற்றும் பாரியளவிலான நிறுவனங்களின் ஆதரவு முதலானவற்றை பெற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு இடத்திலும் உள்ள தனிப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு அல்லாது ஒட்டுமொத்த தொழில் முயற்சி கொத்தணிக்கு வியாபார அபிவிருத்தி சேவைகளை (டீனுளு) வழங்குவது அரசுக்கும் பிற ஆதரவு நிறுவனங்களுக்கும் மிகவும் இலாபகரமானது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் வழிகாட்டுதலின் கீழ் பல்வேறு பிரதேசங்களில் கிடைக்கும் மூலப்பொருள் வளங்களை ஆராய்ந்து உரிய மாவட்டங்களின் ஒருங்கிணைப்பாளர்.ஃ.களினால் கருத்திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை பிராந்தியங்களின் ரீதியில் அடையாளம் காணப்பட்ட வியாபார துறைகளிலுள்ள இலக்கு குழுக்களின் தேவைகளின் அடிப்படையில் இருக்கும். நடைமுறைப்படுத்தலானது மாவட்ட.ஃ. பிரதேச செயலகங்களினூடாக இடம்பெறும். இலக்கு குழுக்களுக்கான வசதிகள்.ஃ. சேவைகள் வழங்கப்படுவதுடன் இதில் தொழில் முயற்சி அபிவிருத்தி, தொழில்நுட்ப மேம்படுத்தல், வியாபார திட்டமிடல், நிதியுதவி, சந்தை அபிவிருத்தி, ஆலோசனைகள் போன்றவையும் உள்ளடங்கும். 2022 ஆம் ஆண்டில், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் பல்வேறு இடங்களில் (தேனீ வளர்ப்பு, விளாம்பழம் மற்றும் பிற பருவகால உற்பத்திகள், உணவு உற்பத்திகள், பலா, மூங்கில் மற்றும் பனை) 5 கொத்தணி வியாபாரங்கள் நிறுவப்பட்டன.

தேனீ வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் - வெல்லவாய

பலா தொடர்பான உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்

08. ஒருங்கிணைக்கப்பட்ட தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியானது (ஆளுஆநுள) இலங்கையின் வளர்ச்சி மற்றும் சமூக அபிவிருத்தி மேம்பாட்டிற்கு முக்கியமான மூலோபாயத் துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக, நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி துறையானது வேலைவாய்ப்பிற்கான பிரதான ஆதாரமாகவும், வருமானம் ஈட்டுவதிலும், வறுமையினை ஒழிப்பதிலும் மற்றும் பிராந்திய அபிவிருத்திக்கான முதன்மையான ஆதாரமாகவும் பரந்த அங்கீகாரத்தினை பெற்றுள்ளது. அதேபோன்று, நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் விவசாயம், சுரங்க அகல்வு, உற்பத்தி, கட்டுமானம் மற்றும் சேவை துறை பணிகள் போன்ற பொருளாதார நடவடிக்கைகளில் பரந்த துறையினை உள்ளடக்குகின்றனர்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் வளர்ச்சி மற்றும் உற்பத்தி விரிவாக்கல் காரணிகள், சந்தைகளும் அவை செயற்படும் ஒழுங்குமுறை அமைப்பில் இருந்து எழும் பிரச்சினைகள் மூலமாக கட்டுப்படுத்தப்படுகின்றது. இந்த பிரச்சினைகளில் நிதி வசதிகளுக்கான அணுகல், பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள், தொழில்நுட்ப மட்டம், ஒழுங்குமுறை கட்டமைப்பு, தகவல் மற்றும் ஆலோசனைக்கான அணுகல், சந்தைக்கான அணுகல், வியாபார அபிவிருத்திச் சேவைகள், தொழிற்துறை உறவுகள் மற்றும் தொழிலாளர் சட்டம், அறிவுசார் சொத்துரிமைகள், தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ திறன்கள், உறவுகளை கட்டியெழுப்புதல் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஆகிய பரந்த துறைகள் உள்ளடங்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட தொழில் முயற்சியாண்மை, சந்தைப்படுத்தல், தொழில்நுட்பம் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான குறைந்தளவான அறிவு போன்ற பிரச்சினைகள் அவர்களுக்கு இருப்பதனை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் இனங்காணப்பட்டுள்ளது. மேலும், அவர்கள் தமது வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்கு∴ விரிவாக்குவதற்கு தேவையான நிதி வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதில் சிக்கல்களை

சந்தித்துள்ளனர். எனவே, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிராந்திய மட்டத்தில் செயற்பட்டு மேற்குறித்த சிக்கல்களுக்கான தீர்வுகள் தேவைப்படும் தொழில் முயற்சியாளர்களை இனங்காணும் நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு வருகின்றனர். 2022 ஆம் ஆண்டில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது 30023 தொழில் முயற்சியாளர்களுக்கான (1292 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்) பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனைய தேவையான வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினூடாக 957 புதிய வியாபாரங்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் 1573 வியாபாரங்கள் விரிவுப்படுத்தப்பட்டுள்ளன.

09. தொழில் முயற்சி மன்றங்கள்

உள்நாட்டு பொருளாதாரத் திறனை அடைந்துகொள்வதற்காக பரந்த அளவிலான திறத்தவர்கள் பிராந்தியத்துடனும், அரசாங்கத்துடனும், சர்வதேச அமைப்புக்களுடனும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வர். பங்கேற்பதில் கவனம் செலுத்துவதன் மூலமாக, உள்நாட்டு பொருளாதார அபிவிருத்தி (டுநுனு) உள்நாட்டு தனியார் மற்றும் பொதுத்துறை திறத்தவர்கள் மற்றும் சமூக, அரசியல் குழுக்களுக்கிடையே ஊக்கப்படுத்தல்களையும் வாய்ப்புகளையும் பங்குடைமையையும் உருவாக்குகின்றன.

உள்நாட்டு பொருளாதார அபிவிருத்திக்காக பொது-தனியார் கலந்துரையாடல்களை உருவாக்குவதற்கு தேசிய மற்றும் மாகாண பொதுத்துறை அதிகாரிகள், தனியார் துறை, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது சேவை வழங்குனர்கள் ஒன்றிணைந்து மாவட்ட தொழில் முயற்சி மன்றங்களை அனைத்து மாவட்டங்களிலும் நிறுவுவதுடன், இதன் தலைமைத்துவமானது மாவட்ட செயலாளர்கள் மூலம் பொறுப்பேற்கப்படும். பிராந்திய தொழில் முயற்சி மன்றங்களானவை பிரதேச செயலாளரினால் தலைமை தாங்கப்படுவதுடன், மாவட்ட மன்றத்தை போலவே வியாபாரத் துறையில் பிரதான தொழில் முனைவோர் மற்றும் பிராந்திய மட்டங்களில் அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள அனைத்து வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களையும் பிராந்திய மன்றங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. மாவட்ட மற்றும் பிராந்திய தொழில் முயற்சி மன்றங்கள் தொழில் முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்தி சேவைகளை வழங்குவதற்காக சரியான வழிமுறைகளை தயாரித்துள்ளன.

நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கங்கள்:

- மாவட்ட மற்றும் பிராந்திய மட்டத்திலான வியாபார அபிவிருத்தி சேவைகளை (டீனுளு) வழங்குவதுடன் உறவொன்றினையும் கட்டியெழுப்புதல்.
- பொது- தனியார் கலந்துரையாடல்களுக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
- மாவட்ட தொழில் முயற்சி மன்றம் (னுகுநு), பிராந்திய தொழில் முயற்சி மன்றம் (சுநுகு) மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி சங்கங்களுக்கிடையிலான சரியான ஒருங்கிணைப்பினை உருவாக்குதல்.
- மா.தொ.மு.ம.ஃ பிரா. தொ.மு. மன்றங்களினூடாக தொழில் முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்தி சேவைகளை வழங்குவதற்கான வழிமுறையொன்றினை தயாரித்தல்.
- மாவட்ட.ஃ பிராந்திய மட்ட மன்றங்களிலிருந்து தேசிய மட்டம் வரை வியாபார ரீதியிலான குறைப்பாடுகளை ஒன்று திரட்டி தீர்வுகளை பெற்றுக்கொள்ளுதல்.

தணிக்கைக் குழு அறிக்கை

நிறுவனத்தின் நிதி அறிக்கைகளின் நேர்மை மற்றும் துல்லியத்தை சுயாதீனமாக மேற்பார்வையிடுவதில் வாரியத்தை ஆதரிப்பதே தணிக்கைக் குழுவின் முதன்மைப் பொறுப்பாகும். உள் கட்டுப்பாட்டு அமைப்புகளின் செயல்திறனைக் கண்காணிப்பதிலும்இ பொருந்தக்கூடிய சட்டங்கள்இ விதிமுறைகள் மற்றும் அதிகாரசபைக் கொள்கைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதிலும்இ நிறுவன நிர்வாகத்தின் மிக உயர்ந்த தரங்களை நிலைநிறுத்துவதிலும் குழு முக்கிய பங்கு வகிக்கிறது.

குழுவின் அமைப்பு

திருமதி.சாமந்தி மீதலாவ - சாரிமன் - கருவூல உறுப்பினர்

திரு.சமிந்த பதிராஜா - கூடுதல் செயலாளர் வரி அமைச்சகம்

திரு.அசங்க விஜேசுந்தர - வாரிய உறுப்பினர்

தணிக்கைக் குழுவின் கூட்டம்

தணிக்கைக் குழு அதன் தீர்ப்பில் அவசியமானதாகவோ அல்லது பொருத்தமானதாகவோ கருதப்படும் போதெல்லாம்இ குறைந்தபட்சம் ஒவ்வொரு ஆண்டும் காலாண்டுக்கு ஒருமுறை கூடுகிறது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில்இ குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட இரண்டு (2) கூட்டங்கள் நடந்தனஇ அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பெயர்	2022 **ஆகஸ்ட்** 26	2022 **நவம்பர்** 23
செல்வி சமந்தி மீத்தலாவ	✓	✓
திரு.சமிந்த பதிராஜா	✓	✓
திரு. அசங்க விஜேசுந்தர	✓	✓

கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகள்

கண்டறிதல்கள்

மறுபரிசீலனை காலப்பகுதியில், கணக்காய்வு குழுவினால் பின்வரும் முக்கியமான விடயங்கள் கண்டறியப்பட்டன:

1. நிதி அறிக்கையின் துல்லியம்

* மொத்தமாக, நிதி அறிக்கைகள் பொருத்தமான கணக்கியல் தரநிலைகளுக்கேற்ப துல்லியமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

* சில செலவுகளின் வகைப்படுத்தலில் சிறிய பிழைகள் காணப்பட்டன, அவை பின்னர் சரிசெய்யப்பட்டன.

2. உள்நாட்டு கட்டுப்பாடுகள்

* உள்நாட்டு கட்டுப்பாட்டு அமைப்புகள் பொதுவாகச் சரிவர உள்ளன; எனினும், கொள்முதல் மற்றும் கையிருப்புப் பராமரிப்பு பகுதிகளில் சில பலவீனங்கள் காணப்பட்டன.

* சில கட்டுப்பாட்டு செயல்முறைகளில் பரிமாற்ற நேரடி பார்வையிடல் மற்றும் ஆவணமிடல் பற்றாக்குறை இருந்தது.

3. சட்ட மற்றும் ஒழுங்கு பின்பற்றுதல்

* நிறுவனம் பெரும்பாலும் சம்பந்தப்பட்ட சட்டப் பொருத்தங்கள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளை பின்பற்றுகிறது.

* சில தனிப்பட்ட சந்தர்ப்பங்களில் சட்டபூர்வ தாக்கல் செய்வதில் தாமதங்கள் காணப்பட்டன.

4. அபாய மேலாண்மை

* அபாய மேலாண்மை கட்டமைப்பு நிலுவையில் உள்ளது, ஆனால் புதிய செயற்பாட்டு மற்றும் நிதி அபாயங்களை பிரதிபலிக்கும் வகையில் புதுப்பிக்க வேண்டியுள்ளது.

* ஒரு முறைபடுத்தப்பட்ட அபாய பதிவேடு வைத்திருப்பதும், ஆனால் அதனை முறையாக புதுப்பிக்கவில்லை என்பதும் காணப்பட்டது.

பரிந்துரைகள்

மேற்கண்ட கண்டறிதல்களின் அடிப்படையில், கணக்காய்வு குழு பின்வரும் பரிந்துரைகளை வழங்குகிறது:

1. நிதி மேற்பார்வையை மேம்படுத்துதல்

* நிதி அறிக்கையின் துல்லியத்தையும் சட்டப் பொருத்தத்தையும் உறுதிப்படுத்துவதற்காக பார்வையிடும் செயல்முறைகளை வலுப்படுத்தவும்.

* வகைப்படுத்தல் மற்றும் அறிக்கை தரப்பட்டுநிலைகள் தொடர்பாக நிதிப் பணியாளர்களுக்கு கூடுதல் பயிற்சி வழங்கவும்.

2. உள்நாட்டு கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல்

* கொள்முதல் மற்றும் கையிருப்பு செயல்பாடுகளில் முழுமையான உள்நாட்டு கட்டுப்பாட்டு பரிசீலனை மேற்கொள்ளவும்.

* ஒழுங்கான உள்நாட்டு கணக்காய்வுகள் மற்றும் ஆவண பரிசீலனைகள் மூலம் அபாயங்களை கண்டு பிடித்து தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும்.

3. ஒழுங்கு பின்பற்றும் முறைமைகளை மேம்படுத்துதல்

* அனைத்து சட்ட மற்றும் ஒழுங்கு தாக்கல்களை நேரத்துடன் செய்ய கண்காணிக்க ஒழுங்கு நாள்காட்டி (compliance calendar) ஒன்றை உருவாக்கவும்.

* ஒவ்வொரு துறையிலும் ஒரு ஒழுங்குப்பொறுப்பாளர் அல்லது நியமிக்கப்பட்ட நபரை பிரித்து ஒதுக்கவும்.

4. அபாய மேலாண்மை நடைமுறைகளை புதுப்பித்தல்

* உள்புற மற்றும் வெளிப்புற அபாயங்களில் ஏற்படும் மாற்றங்களை பிரதிபலிக்க, அபாய பதிவேட்டை நான்காவது மாதத்திற்கு ஒருமுறை புதுப்பிக்கவும்.

* முக்கியத் துறைகள் பங்கேற்கும் வகையில் வழக்கமான அபாய மதிப்பீட்டு வேலைமுறைகளை நடத்தவும்.

பத்து வருட சுருக்க அறிக்கை

தேசிய தொழில் மேம்பாட்டு ஆணையம்

பத்து ஆண்டு சுருக்கம்

முடிவடைந்த ஆண்டு: 31 டிசம்பர் 2022	2022 ரூ.	2021 ரூ.	2020 ரூ.	2019 ரூ.	2018 ரூ.	2017 ரூ.	2016 ரூ.	2015 ரூ.	2014 ரூ.	2013 ரூ.
செயல்பாட்டு முடிவுகள்										
வருவாய்	47,639,042	67,351,225	55,811,496	65,688,802	61,802,223	88,602,274	74,996,735	39,825,937	49,660,319	39,757,351
இயக்க லாபம்	3,740,582	8,687,298	2,182,904	(867,647)	3,645,633	27,372,346	18,004,593	(613,396)	3,527,892	(521,069)
வரிக்குப் பிந்தைய லாபம்	3,740,582	8,687,298	2,182,904	(867,647)	3,645,633	27,372,346	18,004,593	(613,396)	3,527,892	(521,069)
பொறுப்புகள் மற்றும் ஈகை										
மொத்த ஈகை		14,334,853	6,554,761	2,405,900	49,798,341	26,303,316	18,564,910	2,132,443	3,705,071	177,179
நீண்டகால பொறுப்புகள்		12,243,097	11,051,563	4,591,827	5,919,000	8,224,582	9,746,701	12,918,919	13,840,972	15,880,202
தற்போதைய பொறுப்புகள்		4,442,733	13,791,915	93,770,936	106,540,060	143,103,392	52,068,514	2,997,133	1,699,235	2,309,263
மொத்த ஈகை மற்றும் பொறுப்புகள்		31,020,684	31,398,237	100,768,662	162,257,401	177,631,289	80,380,125	18,048,495	19,245,278	18,366,641
நீண்டகால சொத்துகள்										
பிற தற்போதைய சொத்துகள்	14,365,806	13,401,006	12,125,428	5,752,892	7,476,170	10,097,481	11,988,452	14,690,973	16,752,897	17,399,556
தற்போதைய சொத்துகள்	250,000									
மொத்த சொத்துகள்	20,797,660	17,619,678	19,272,809	95,015,770	154,781,228	167,533,806	68,391,671	3,357,519	2,492,381	967,085
விகிதங்கள்	35,413,466	31,020,684	31,398,237	100,768,662	162,257,401	177,631,289	80,380,125	18,048,492	19,245,278	18,366,641
வரிக்கு முந்தைய லாப விகிதம்	7.85	12.90	3.91	-1.32	5.90	30.89	24.01	-1.54	7.10	-1.31
தற்போதைய சொத்து விகிதம்	2.38	1.86	1.26	1.02	1.44	1.17	1.2	1.13	1.23	1.01

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } ටීජ්සී/ඩී/එන්ඊඩීඒ/එෆ්ජ්/2022/04 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2025 අප්‍රේල් 08 දින

සභාපති,

ජාතික ව්‍යවසාය සංවර්ධන අධිකාරිය

ජාතික ව්‍යවසාය සංවර්ධන අධිකාරියේ 2022 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන සහ වෙනත් නෛතික හා නියාමන අවශ්‍යතා පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 වන වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති වාර්තාව

---

1. මූල්‍ය ප්‍රකාශන

1.1 තත්ත්වාගණනය කළ මතය

ජාතික ව්‍යවසාය සංවර්ධන අධිකාරියේ 2022 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්ව ප්‍රකාශනය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ විස්තීරණ ආදායම් ප්‍රකාශනය, හිමිකම් වෙනස්වීමේ ප්‍රකාශනය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශනය සහ මූල්‍ය ප්‍රකාශනවලට අදාළ සටහන්, සාරාංශගත වැදගත් ගිණුම්කරණ ප්‍රතිපත්තිවලින් සමන්විත 2022 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(1) ව්‍යවස්ථාව සමග සංයෝජිතව කියවිය යුතු 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ සහ 1971 අංක 38 දරන මුදල් පනතේ ඇතුළත් විධිවිධාන ප්‍රකාර මාගේ විධානය යටතේ විගණනය කරන ලදී. ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(6) ව්‍යවස්ථාව ප්‍රකාරව මාගේ වාර්තාව යථා කාලයේදී පාර්ලිමේන්තුවේ සභාගත කරනු ලැබේ.

මාගේ වාර්තාවේ තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනම කොටසේ විස්තර කර ඇති කරුණුවලින් වන බලපෑම හැර, අධිකාරියේ මූල්‍ය ප්‍රකාශන තුළින් 2022 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්වය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා එහි මූල්‍ය ක්‍රියාකාරීත්වය හා මුදල් ප්‍රවාහ ශ්‍රී ලංකා ගිණුම්කරණ ප්‍රමිතිවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිබිඹු කරන බව මා දරන්නාවූ මතය වේ.

1.2. තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනම

(අ) අස්පෘශ්‍ය වත්කම් සඳහා වූ ගිණුම්කරණ ප්‍රතිපත්තිය මූල්‍ය ප්‍රකාශනවල හෙළිදරව් කර නොතිබූ අතර ශ්‍රී ලංකා නිපැයුම් විද්‍යුත් වෙළඳ ද්වාරය සඳහා වූ දත්ත පද්ධතිය සඳහා ඉකුත් වර්ෂයේ හා සමාලෝචිත වර්ෂයේ වැය කර තිබූ පිළිවෙළින් රු. 8,640,000 ක් හා රු.960,000 ක් වශයෙන් එකතුව රු.9,600,000 ක් ශ්‍රී ලංකා ගිණුම්කරණ ප්‍රමිති අංක 38 අනුව අස්පෘශ්‍ය වත්කම් යටතේ දැක්වීම වෙනුවට වියදම් ලෙස ගිණුම් ගත කර තිබුණි.

(ආ) සමාලෝචිත වර්ෂයේ ලද පුනරාවර්තන රාජ්‍ය ප්‍රදාන රු.2,690,000 ක් මූලධන ප්‍රදාන ලෙස ගිණුම්ගත කර තිබුණි.

